பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

25 08-2025 6.30

திங்கட்கிழமை மாலை

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

- விவசாயிகளின் நலனில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

- தேசிய நல்லாசிரியர் விருது தமிழகத்தைச் சேர்ந்த இருவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

- அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரிக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

- அரசுப் பள்ளி மாணவிகளின் பாதுகாப்பில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாக பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.

- ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா 5 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள் -

விவசாயிகளின் நலனில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இன்று போபாலில் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

விவசாயிகளின் நலனுக்கு எதிரான எந்தவொரு வர்த்தக ஒப்பந்தத்திலும் பிற நாடுகளுடன் இந்தியா கையெழுத்திடாது என்று திரு சிவராஜ் சிங் சவுகான் கூறினார்.

>><><><><<

நடப்பாண்டுக்கான தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தமிழகத்தைச் சேர்ந்த 2 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் உள்ள தனியார் பள்ளி ஆசிரியர் திருமதி ரேவதி பரமேஸ்வரனும், திருப்பூர் அரசுப்பள்ளி ஆசிரியர் திருமதி விஜயலட்சுமியும் இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விருது தமக்கு அறிவிக்கப்பட்டு இருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று திருமதி ரேவதி பரமேஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – ரேவதி–30 செகண்ட்ஸ்)

நாடுமுழுவதும் 45 பேர் இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

>><><><><<

அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பள்ளி கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் – அன்பில் - 34 செகண்ட்ஸ்)*

>><><><<

அரசுப்பள்ளி மாணவர்களின் பாதுகாப்பில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், கோவை கிணத்துக்கடவு அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களை குற்றம்சாட்டி மாணவிகள் காணொலி வெளியிட்டு இருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர்கள் குடித்து விட்டு பள்ளிக்கு வருவதோடு, பாலியல் ரீதியாக அத்துமீறுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவிகளின் பாதுகாப்பை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை முதலமைச்சர் எடுப்பாரா என்றும் திரு நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

>><><><<

விவசாயிகளின் நலனில் அஇஅதிமுக எப்போதும் அக்கறை கொண்டு இருப்பதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இன்று திருச்சியில் விவசாயிகள் தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் சிறுகுறு தொழில் துறையினருடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

விவசாயிகளின் நலனுக்காக அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் திரு எடப்பாடி பழனிசாமி பட்டியலிட்டார்.

>><><><<

தமிழக சட்டப்பேரவையின் அடுத்த கூட்டத் தொடரில் ஆணவக் கொலை தடுப்புச் சட்ட மசோதாவை கொண்டு வர முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலர் திரு சண்முகம் கோரியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், நெல்லை மாவட்டத்தில் மட்டும் ஒரு வருடத்தில் 240 ஆணவக்கொலைகள் நடைபெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சாதி மறுப்பு திருமணங்களை செய்து கொள்ள தனி ஏற்பாடு இல்லை என்று கூறியுள்ள திரு சண்முகம், மாநிலம் முழுவதும் உள்ள தங்களது கட்சி அலுவலகங்களில் காதல் திருமணங்களை நடத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

>><><><<

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 5 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் – 55 செகண்ட்ஸ்)*

>><><><<

சென்னை துறைமுகத்தில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக சென்னை மற்றும் காமராஜர் துறைமுக தலைவர் திரு சுனில் பாலிவால் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் – பாலிவால் – 46 செகண்ட்ஸ்)*

>><><><<

## *மாவட்டச் செய்திகள்*

*நாமக்கல் மாவட்டம் சூரிய கவுண்டம்பாளையத்தில் புதிதாக திறக்கப்பட்ட அரசு தொழில் பயிற்சி நிலையத்தினை மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் பார்வையிட்டார்.*

-------------------

*கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது விரைவில் தீர்வு காணுமாறு ஆட்சியர் திருமதி அழகு மீனா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.*

-------------------

*நாமக்கல் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி இன்று வழங்கினார்.*

-------------------

*தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் காவல்துறையினர் அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்ட கரும்பு விவசாயிகள் கைது செய்யப்பட்டனர்.*

-------------------

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் ஆட்டோக்களின் ஆவணங்களை இன்று ஆய்வு செய்தார்.*

---------------

*கிருஷ்ணகிரி அணை அதன் முழுகொள்ளளவை எட்ட உள்ளதை அடுத்து உபரிநீர் வெளியேற்றப்படுவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

-------------------

*ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடியாக குறைந்துள்ளது.*

-------------------

*சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 10 வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நாளை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

>><><><><<

## *விளையாட்டுச் செய்திகள்*

*ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா 5 தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கம் வென்றது.*

*கஜகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஜூனியர் 25 மீட்டர் பிரிவில் Payal Khatar தங்கப்பதக்கத்தையும், Naamya Kapoor வெள்ளிப்பதக்கத்தையும், Tejaswini வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.*

*இதன் குழுப்பிரிவிலும் இந்தியாவுக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.*

*மகளிர் சீனியர் குழுப் பிரிவிலும் இந்தியா தங்கப் பதக்கம் வென்றது.*

*மகளிர் Trap பிரிவில் Neeru தங்கப்பதக்கத்தையும், Aashmita Ahlawat வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.*

*இதன் குழுப்பிரிவிலும் இந்தியாவுக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.*

*25 மீட்டர் மகளிர் பிரிவில் இந்தியாவுக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.*

*இப்போட்டியில் இந்தியா இதுவரை 28 தங்கம், 9 வெள்ளி, 12 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கிறது.*

-------------

*காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று எட்டு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.*

*அகமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 56 கிலோ எடைப்பிரிவில் Dharmajyoti-யும், மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் மீராபாய் சானுவும், 44 கிலோ எடைப்பிரிவில் Preetismita Bhoi-யும் தங்கப்பதக்கம் வென்றனர்.*

*மகளிர் ஜூனியர் பிரிவில் Soumya-வும் மகளிர் இளையோர் பிரிவில் Payal -ம் தங்கப்பதக்கம் வென்றனர்.*

*பவானி ரெட்டிக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.*

*ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் Rishikanta Singh -ம் ஆடவர் ஜூனியர் மற்றும் இளையோர் பிரிவில் ஆறுமுகப் பாண்டியன் மகாராஜனும் தங்கப்பதக்கம் வென்றனர்.*

-------------

*CAFA கோப்பை கால்பந்துப் போட்டியில் பங்கேற்பதற்கான 23 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இப்போட்டி வரும் 29 ஆம் தேதி தஜிகிஸ்தானில் தொடங்குகிறது.*

--------------

*23 வயதுக்கு உட்பட்டோருக்கான நட்புணர்வு கால்பந்து போட்டியில் இந்தியா – ஈராக் இடையேயான ஆட்டம் தற்போது கோலாலம்பூரில் நடைபெற்று வருகிறது.*

*>> End of News <<*